T.C.036

012/DM/26

Register Number									

DEPARTMENTAL EXAMINATIONS

TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

கொடுக்கப்பட்ட தமிழ்ப்பத்தியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.

(4 × 25 = 100)

1. Translate the following into English.

தமிழகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் 400 க்கும் அதிகமான என்ஜினீயரிங் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்தக் கல்லூரிகளுள் 2 லட்சத்துக்கும் அதிகமான பி.இ., பி.டெக்., பி.ஆர்க்., ஆகிய தொழில்நுட்பப் படிப்புகள் உள்ளன. இதற்கான, 2024–25-ஆம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கை ஆன்லைன் விண்ணப்பப் பதிவு கடந்த மே மாதம் 6-ஆம் தேதி தொடங்கியது. மாணவ, மாணவிகள் என்ஜினீயரிங் படிப்பிற்கு ஆர்வத்துடன் விண்ணப்பித்தார்கள்.

நேற்று மாலை 6 மணி நிலவரப்படி, 2 லட்சத்து 42 ஆயிரத்து 983 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதில், ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 570 மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளார்கள். ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 68 மாணவர்கள் அசல் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்துள்ளனர். இந்த நிலையில், என்ஜினீயரிங் படிப்புக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்றுடன் (வியாழக்கிழமை) நிறைவடைகிறது. விருப்பமுள்ள மாணவர்கள், www.tnealinline.org. என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். அசல் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்ய 12-ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அன்றைய தினமே, மாணவர்களுக்கான சமவாய்ப்பு எண் வழங்கப்படும். விளையாட்டுப் பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு, வருகிற 12-ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுகிறது. அதற்குத் தகுதி பெற்ற மாணவர்களின் விவரங்கள், www.tnealinline.org. என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்பிறகு, பொதுப்பிரிவு மாணவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு வருகிற 13-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரையில் ஆன்லைன் வாயிலாக நடத்தப்பட உள்ளது. கலந்தாய்வுக்கான தரவரிசை பட்டியல் அடுத்த மாதம் 10-ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது. விரைவில் கலந்தாய்வு மற்றும் மாணவர் சேர்க்கை தேதிகள் அறிவிக்கப்படும் என்று தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

[Turn over

2. Translate the following into English.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கி மழைப் பொழிந்து வருகிறது. அந்த வகையில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட மாவட்டங்களில் பரவலான மழைப் பொழிந்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றும் (வியாழக்கிழமை), நாளையும் (வெள்ளிக்கிழமை) தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் அறிவித்துள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாகத் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று(வியாழக்கிழமை) இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் லேசானது மற்றும் மிதமான மழைப் பெய்யக்கூடும். கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப் பகுதிகளிலும், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் கன மழைக்கான மஞ்சள் எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

நாளை (வெள்ளிக்கிழமை) தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 9-ஆம் தேதி வரை தமிழகத்தில் வெப்பநிலை, இயல்பை விட சற்று அதிகமாக இருக்கக்கூடும். சென்னையைப் பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு (இன்றும், நாளையும்) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

3. Translate the following into English.

தன்னுடைய தொகுதியில் போட்டியிடும் எந்த வேட்பாளரையும் வாக்காளர் ஒருவருக்குப் பிடிக்கவில்லை. அதே சமயம் தான் வாக்களிப்பதில் இருந்து தவறவும் விரும்பவில்லை. தனது வாக்கை இன்னொருவர் தவறாகப் பயன்படுத்துவதை அனுமதிக்கவும் விருப்பமில்லை என்று சிந்திக்கும் வாக்காளர்களுக்கும் ஜனநாயக முறைப்படி வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு என உருவாக்கப்பட்ட முறைதான் 'நோட்டா'. அதாவது 'மேலே உள்ள எவரும் அல்ல' என்பது இதன் பொருள்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவு நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளில் 4 லட்சத்து 67 ஆயிரத்து 68 ஓட்டுகளை 'நோட்டா' பெற்றுள்ளது. இது 1.07 சதவீதமாகும். இதில் அதிகபட்சமாக ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதியில் 26 ஆயிரத்து 450 வாக்குகளை 'நோட்டா' பெற்றுள்ளது. அதேபோல் குறைந்த பட்சமாக, கன்னியாகுமரி தொகுதியில் 3 ஆயிரத்து 756 வாக்குகளை 'நோட்டா' பெற்றுள்ளது. இது குறித்துத் தேர்தல் நடத்தும் அதிகாரிகள் கூறும் போது, 'நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் 'நோட்டா' ஆதிக்கம் செலுத்தி உள்ளது. இதுவரை, நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சட்டசபை தேர்தல்களின் முடிவுகளில் நோட்டா எந்தப் பாதிப்பையும் பெரிதாக ஏற்படுத்தவில்லை' என்று தேர்தல் நடத்தும் அதிகாரிகள் கூறினர்.

4. Translate the following into English.

அரசு பணிக்கான தேர்வில் தமிழ் மொழித்தாளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற அரசாணையை எதிர்த்துத் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

அரசு பணியாளர்கள் பணி நிபந்தனை சட்டத்தில் கடந்த 2021-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்தின்படி அரசு பணிகளுக்கு நடத்தப்படும் தமிழ் மொழித்தாளில் 40 சதவீத மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சிப் பெற்றிருந்தால் மட்டுமே பொது அறிவு மற்றும் திறனறிவு தேர்வுக்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் காலியாக உள்ள 6 ஆயிரத்து 244 குரூப் 4 பணியிடங்களுக்கான தேர்வு அறிவிப்பாணையை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டது.

இந்த அறிவிப்பாணையை எதிர்த்தும், தமிழ் மொழித்தாள் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றால் மட்டுமே பொது அறிவு, திறனறிவு தேர்வுத்தாள் மதிப்பீடு செய்யப்படும் என்ற அரசாணையை எதிர்த்தும் நிதேஷ் உள்ளிட்ட 10 பேர் சென்னை ஐகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், விண்ணப்பதாரர்களுக்கான கல்வித்தகுதியை நிர்ணயிக்க அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது. குரூப்-4 பதவிகளை வகிப்பவர்கள், மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டியவர்கள். அதனால், அவர்கள் தமிழ் மொழியில் புலமைப் பெற்றிருப்பது அவசியம். இது தொடர்பான அரசின் கொள்கை முடிவில் தலையிட முடியாது எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை எதிர்த்துத் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு, நீதிபதிகள் ஆர். மகாதேவன், முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாடு அரசு தரப்பில், இந்த அரசாணைப்படி ஏற்கனவே பல தேர்வுகள் நடத்தப்பட்டு விட்டது, அரசு பணிகளுக்குத் தமிழ் மொழித்தாளில் தேர்ச்சிப் பெற்றிருப்பது அவசியம் என்ற அரசின் கொள்கை முடிவில் ஐகோர்ட்டுத் தலையிட முடியாது. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.
